**145.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.14 சிலப்பதிகார தெரு தமிழ்நாடு காவல் குடியிருப்பு அருகில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலில் மழைக்காலங்களில் கழிவுநீரானது சாலைகளில் வெளியேறி அப்பகுதி பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலின் மீது RCC Precast Cover Slab அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ( /2025/இ4)

**146.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.40, சாலாமேடு புதுநகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, நியாயவிலைக் கடை மற்றும் பொதுகழிவறை ஆகியவைகளை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.18,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2537/2025/இ4)

**147.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.23, கண்ணப்பா லே அவுட், அக்ரஹார தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலையானது பழுதடைந்து இருப்பதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட பகுதியில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.12,70,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2722/2025/இ4)

**148.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.32 நித்தியானந்தம் நகர் மற்றும் குறுக்கு தெருவில் சாலைகள் சேதமடைந்து போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே புதியதாக மேற்கண்ட தெருவிற்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.12,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2775/2025/இ4)

**149.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, காகுப்பம் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் உள்ள நிர்வாக அலுவலக கட்டிடம், காவலர் பயிற்சி பள்ளி, காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு செல்லும் அணுகு சாலைகள் பழுதடைந்தும், பாதாள சாக்கடை பணியினால் பழுதடைந்தும் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் தார்சாலை கொண்டு அணுகு சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.66.00 இலட்சத்திற்கு (ரூபாய் அறுபத்தாறு இலட்சம் மட்டும்) அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதியின் கீழ் அனுமதி பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(      /2025/இ4)

**150.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.06–ல் அமைந்துள்ள வண்ணான்குட்டையிலிருந்து மழைநீர் வெளியேறுவதால் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் மற்றும் தெருக்களில் உள்ள சாக்கடை நீரும் இவ்வடிகால் வழியே செல்வதால் மழைநீர் தேங்கி கொசுதொல்லை அதிகமாக இருப்பதால் பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு, சர்வேஸ்வரன் தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில் RCC Precast Cover Slab அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

( /2025/இ4)

**151.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.40, சாலாமேடு நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் சமுதாய கூடத்தில் சுற்றுச்சுவர் அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பிலிருந்து தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட சாலாமேடு நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் சமுதாய கூடத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.18,00,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

( 2755/2025/இ4)

**152.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.17 கிழக்கு பாண்டி ரோடு SVS ஆயில் மில் மற்றும் மகாராஜபுரம் நுழைவு வாயில் பகுதியில் அமைந்துள்ள பாதாள சாக்கடை பைப்லைன் பழுதடைந்துள்ளதால், மேற்கண்ட பகுதியில் புதியதாக பாதாள சாக்கடை பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.11,30,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

( /2025/இ3)

**153.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.03, விநாயகர் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் முதல் தெரு ஆகிய பகுதிகளில் சாலை இல்லாததால், மேற்கண்ட பகுதிகளில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.16,50,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ( 2641/2025/இ4)

**154.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.20 சந்தானகோபாலபுரம் கீழ்அக்ரஹாரம் தெருவில் சிறுபாலம் (ம) மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,20,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2680/2025/இ4)

**155.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.38 N.G.G.O காலனியில் மழைநீர் வடிகால் (ம) சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2732/2025/இ4)

**156.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.22 அண்ணா நகர் குறிச்சிக் குட்டை பகுதி தாழ்வான பகுதியாக இருப்பதால் பருவமழை காலங்களில் வீடுகளில் மழைநீர் புகுந்து பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே குறிச்சி குட்டை தூர்வாரி பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3,40,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (1593/2025/இ4)

**157.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.13 அருந்ததியர் தெரு மற்றும் அருந்ததியர் தெரு-A ஆகிய தெருக்களில் குடிநீர் பணிகள் மேற்கொண்டதில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் தெருவில் சாலை சீரமைக்க வேண்டியுள்ளதால் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.16,70,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2737/2025/இ4)

**158.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.32 சலவையார் குல்க்கரை தெருவில் உள்ள சாலையானது பாதாள சாக்கடை பணியினால் மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக இருப்பதால், மேற்கண்ட பகுதிகளில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,70,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2775/2025/இ4)

**159.** விழுப்புரம் மாவட்ட நிரந்தர மக்கள் நீதிமன்றம் இறுதி அறிவிப்பு PLA/B/NO.07/2024, நாள்.18.02.2025 கடிதத்தின்படி, 27.02.2025 அன்று ஆஜராகியதில், மேற்படி நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் வார்டு எண்.32 அறிஞர் அண்ணா தெரு, வழுதரெட்டி பகுதியில் சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் சாலை அமைத்து தர உத்தரவிடப்பட்டது. எனவே, மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு (ரூபாய் பன்னிரண்டு இலட்சம் மட்டும்) அனுமதியும், மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (1582/2025/இ1)

**160.** விழுப்புரம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-25-ன் கீழ் 14-வது CPSMC கூட்ட நடவடிக்கைகளின்படி, வார்டு-A, பிளாக்-77, நகரளவு எண்.11/26-ல், 11451.19 சதுர அடி (1063.85 Sq.m) பரப்பளவில் அமைந்துள்ள குழந்தைவேல் நகர் பூங்காவில் ரூ.0.83 கோடி மதிப்பீட்டில் அறிவியல் பூங்கா அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, 18.12.2024 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | மதிப்பீட்டை விட சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு-A, பிளாக்-77, நகரளவு எண்.11/26-ல், 11451.19 சதுர அடி (1063.85 Sq.m) பரப்பளவில் அமைந்துள்ள குழந்தைவேல் நகர் பூங்காவில் அறிவியல் பூங்கா அமைக்கும் பணி. | 83.00 | M.மீனாட்சி | 80,83,163 | -0.04% குறைவு |
| | | | N.சுந்தர்ராஜன் & கோ | 81,03,151 | 0.21% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1). மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.M.மீனாட்சி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட -0.04 குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

2). அரசின் திட்டப் பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5884/2024/இ1)

**161.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.39 டவர் ரோடு முதல் புத்துமாரியம்மன் கோவில் மற்றும் சிங்கப்பூர் நகர் பிரதான சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2758/2025/இ4)

**162.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.7 காகுப்பம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) செல்லும் அணுகு சாலையானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்ட பணியின் போது சேதமடைந்துள்ளது. எனவே புதியதாக தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.14,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2685/2025/இ4)

**163.** அரசாணை (நிலை) எண்.187, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5(2)) துறை, நாள்.02.12.2024-ல் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, விவேகானந்தா நகர் விரிவாக்கம் மற்றும் அக்ரி நகர் பகுதியில் உள்ள பிரதான சாலைக்கு 1).வாஞ்சிநாதன் தெரு (044026R044), 2).முதல் வலதுபுறச் சாலைக்கு மருது சகோதரர்கள் தெரு (044026R134), 3).இரண்டாவது வலதுபுறச் சாலைக்கு வேலு நாச்சியார் தெரு (0440265003), 4).மூன்றாவது வலதுபுறச் சாலைக்கு தீரன் சின்னமலை தெரு (044026R106), 5).நகரின் இடதுபுறச் சாலைக்கு அழகு முத்துகோன் தெரு (044026R150) என பெயர் சூட்டுமாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணையின்படி, வார்டு எண்.26 விவேகானந்தா நகர் விரிவாக்கம் மற்றும் அக்ரி நகர் பகுதியில் உள்ள பிரதான சாலைக்கு 1).வாஞ்சிநாதன் தெரு (044026R044), 2).மருது சகோதரர்கள் தெரு (044026R134), 3).வேலு நாச்சியார் தெரு (0440265003), 4).தீரன் சின்னமலை தெரு (044026R106), 5).அழகு முத்துகோன் தெரு (044026R150) ஆகிய பிரதான சாலை தெருவிற்கு பெயர் பலகை பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (3429/2021/இ1)

**164.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.11 ஆபேஷா தக்கா தெருவில் சேதமடைந்த பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்களை புதியதாக மாற்றி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5,20,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57 (7)-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.P.பாலகுரு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.5,11,598/-ஐ குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

(6364/2024/இ4)

**165.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.31 சுதாகர் நகர் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் வசதி செய்வதற்கு வார்டு எண்.38 NGGO காலனி புகாரி நகரில் இருந்து KK நகர் OHT வரை பிரதான பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2782/2025/இ2)

**166.** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தனிப்பிரிவிற்கு பொதுமக்கள் வார்டு எண்.27, வீனஸ் நகரில் மழைநீர் வடிகால் அமைத்து தரக் கோரியதை தொடர்ந்து, மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அனுமதியும், மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ( /2025/இ1)

**167.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைந்துள்ள எருமணந்தாங்கல் Lifting Station-ல் உள்ள 25HP & 16HP, காகுப்பம் மிலிட்டரி கேன்டீன் Pumping Station-ல் உள்ள 16HP-2Nos, வடக்கு தெரு Pumping Station-ல் உள்ள 16HP-2Nos மற்றும் பழைய பேருந்து நிலையம் Pumping Station-ல் உள்ள 16HP-1No ஆகிய மின்மோட்டார் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.8,80,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57 (7)-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.P.சிவகுரு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.8,78,318/-ஐ குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம். (1863/2024/இ4)

**168.** விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.ஐ1/E-2550351/2024, நாள்.17.11.2024-ன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான விழா திடலில் உள்ள பயனாளிகள் (ம) பொதுமக்களுக்கு ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் தற்காலிக கழிவறை வசதிகள் செய்யும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 26.11.2024 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.ராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.9,29,081/- | -0.01 % குறைவு |
| 2 | பிரேமா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.9,32,997/- | 0.41 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட -0.01% குறைவு) திரு.K.ராஜா, ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு பயனாளிகள் (ம) பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் தற்காலிக கழிவறை அமைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (9976/2024/இ2)

**169.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள காகுப்பம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP)-ல் உள்ள 2 Nos Aeration தொட்டிகளில் கசடுகள் படியப்பட்டுள்ள கழிவுகளை தூர்வாரி சுத்தம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.7,80,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57 (7)-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.7,78,339/-ஐ குடிநீர் (ம) வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம். (6054/2024/இ3)

**170.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.36 விஜயன் தெரு மற்றும் புகாரி தெருவிற்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2750/2025/இ4)

**171.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.28 தர்மராஜர் தெருவில் ஜான்டூயி பள்ளி அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2734/2025/இ4)

**172.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.34 சபரி நகர் மெயின் ரோட்டில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57 (7)-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருமதி.P.லதா, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.9,90,000/-ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம். (6144/2024/இ4)

**173.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2105/2024/P1, நாள்.27.05.024-ன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025-ன் கீழ் விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.35, 36-ல் காமராஜர் தெரு நாயக்கன் தோப்பு என்ற இடத்தில் ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் 13X10=130 சதுர அடியில் 24 வணிக வளாக கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்று உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் அதற்கான வைப்பு தொகை 1 கடைக்கு ரூ.3,00,000/- நிர்ணயம் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது ஏவம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மற்றும் இதர செலவினம் ரூ.1.00/- இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி அனுமதிக்கலாம். ( /2025/அ1)

**174.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.41 தந்தை பெரியார் நகரில் உள்ள பூங்காவில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல் முன்புற நுழைவாயில் அருகே கேட் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,10,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2757/2025/இ4)

**175.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.18 ஸ்ரீவாரி தெருவில் புதியதாக பாதாள சாக்கடை Manhole with Pipeline அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,20,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ( /2025/இ2)

**176.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.23 பூந்தோட்டம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள சுற்று சுவர் பழுதடைந்து சாய்ந்த நிலையில் இருப்பதால் பள்ளி மாணவர்கள் நலன் கருதி புதியதாக சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.11,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2723/2025/இ4)

**177.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் வார்டுகளில் சாலை வசதி, சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.34 VVS நகரில், ராமமூர்த்தி சந்தான தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 10,00,000 |
| 2 | வார்டு எண்.28 ராமமூர்த்தி லே-அவுட் மற்றும் தர்மராஜ் தெரு சிறுபாலம் (ம) மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 17,00,000 |
| 3 | வார்டு எண்.18 சண்முகபுரம் காலனி திருப்பாணழ்வார் தெரு முதல் DS பத்தர் தெரு வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 21,80,000 |
| 4 | வார்டு எண்.16 தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு தெருவில் சிறுபாலம் (ம) மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 9,70,000 |
| 5 | வார்டு எண்.5 எருமணந்தாங்கல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுற்றுசுவர் பாதுகாவலர் அறை மற்றும் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 14,20,000 |
| 6 | வார்டு எண்.37 டாக்பியா நகர், திருவள்ளுவர் தெரு, மண்டாகுளம் மற்றும் பிள்ளையார் கோவில் தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி | 23,50,000 |
| 7 | வார்டு எண்.13 நந்தனார் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் மற்றும் UGSS மேன்ஹோல் அமைக்கும் பணி | 13,00,000 |
| 8 | வார்டு எண்.30 கே.ஆர்.ஜி. நகர் 1வது, 2வது மற்றும் 3வது தெருக்களில் WMM மற்றும் GSB கொண்டு சாலை செப்பணிடும் பணி | 16,90,000 |
| 9 | வார்டு எண்.28 மணி நகர் 1வது, 3வது, 4வது தெருவிற்கு GSB கொண்டு செப்பணிடும் பணி | 9,10,000 |

மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2671/2025/இ4)

**178.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.12, மாரியம்மன் கோவில் தெரு மற்றும் காமராஜர் தெரு மற்றும் இதர தெருக்களில் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பிற்காக தோண்டிய சாலையினை Patch Work செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2754/2025/இ4)

**179.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.18 ஊரல் குட்டை பகுதி தாழ்வான பகுதியாக இருப்பதால் பருவமழை காலங்களில் வீடுகளில் மழைநீர் புகுந்து பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஊரல் குட்டை பகுதியில் மழைநீர் வெளியேற்றுவதற்கு சம்ப், Non clog மின் மோட்டார் மற்றும் பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.31,00,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (8844/2025/இ4)

**180.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.5 Dr.இளங்கோ நகர் பிரதான சாலை 1 முதல் 4வது தெரு வரை, சம்பந்தம் நகர் 1 மற்றும் 2வது தெரு மணிக்குயில் நகர், சங்கதமிழ் தெரு, இளையதமிழ் தெரு ஆகிய தெருக்களில் புதிதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2677/2025/இ2)

**181.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.42-ல் ஜெகன்நாதன் நகர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் ராகவேந்திரா நகருக்கு பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,40,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (2672/2025/இ2)

**182.** நகராட்சி பொது சுகாதாரம், நகராட்சி 42 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள பொது மற்றும் சமுதாய கழிவறைகள்-19 எண்ணிக்கை மற்றும் கீழ்காணும் விவரப்படியான 2 பொது கழிவறைகள் மற்றும் 2 சமுதாய கழிவறைகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. பானாம்பட்டு VAO Office அருகில்

2. அய்யனார்குளம், திரு.வி.க வீதி
3. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக பூங்கா, கிழக்கு பகுதி
4. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக பூங்கா, மேற்கு பகுதி

மேற்படி கழிவறைகளும் சேர்த்து 23 கழிவறைகளுக்கு 01.04.2025 முதல் 31.03.2026 முடிய ஓராண்டு காலம் சுய உதவிக்குழு மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரவும் மற்றும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுவிலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(2773/2025/எச்1)

**183.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.33 சுப்ரமணிய சுவாமி நகர், காமன் கோவில் தெரு ஆகிய பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து HDPE Tank அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,20,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2735/2025/இ2)

**184.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.5, SVS அவென்யூ 1 முதல் 7 தெருக்கள் வரையிலும் மற்றும் லட்சுமி நகர், கல்பனா சாவ்லா நகர் ஆகிய பகுதிகளுக்கு புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.15,50,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2677/2025/இ2)

**185.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.19 தாயுமானவர் தெரு, முத்துமாரியம்மன் கோவில் தெரு மற்றும் குப்புசாமி தெரு ஆகிய இடங்களில் புதிய ஆழ்துளை குழாய் கிணறுடன் கூடிய மினி பவர் பம்ப் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,80,000/-க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை திட்ட நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2756/2025/இ2)

**186.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூந்தோட்டம் கிராமம், வார்டு–A, பிளாக்–77, நகரளவு எண்.8/72, (பழைய நகரளவு எண்.40/2pt, 244/1–4–ல் 1.04 ஏக்கர் அல்லது 4209 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண். D2GTCT2/2024/TCP நாள்.07/10/2024–ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ந.ஊ.உ.இ(வி.மா) எண்.210/2024 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.5147/2024, நாள்.12.09.2024–ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது. புதிய மனைப்பிரிவிற்காக விடப்படும் சாலைகள். 1027.78 சதுர மீட்டர் மற்றும் உள்ளாட்சிக்கு 22.22 ச.மீ, மின்சாரதுறைக்கு 22.76 ச.மீ ஆகிய இடங்கள் விபரம் பின்வருமாறு

சொத்து விவரம்: –

விழுப்புரம் ரி.டி.விழுப்புரம் 2நீ சப்ரியை சேர்ந்த, பூந்தோட்டம் எல்லையில், அயன் புஞ்சை சர்வே எண்.244/1, 244/2, 244/3, 244/4, 244/5 இவைகளில் கலந்தாற்போல் உள்ளதில் ஏக்கர் 1.04 செண்ட் இவைகளுக்கு டவுன் சர்வே எண்.8/72, வார்டு–A, பிளாக்–77, (இவைகளுக்கு பழைய டவுன் சர்வே எண்.40/2pt ஆகும்) ஆக இவைகளில் கலந்தாற்போல் பிரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கான பொது உபயோகத்திற்கென விடப்பட்டுள்ள சாலைகள் விபரம்:–

சாலை –1 :– மேற்படி மனைப்பிரிவில் உள்ள தெற்கு வடக்காக செல்லும் 7.00 மீட்டர் அகலமுள்ள 1–வது சாலைக்கு சக்குபந்தி:– வாய்க்கால் டவுன் சர்வே எண்.6/5–க்கும் (தெற்கு) டவுன் சர்வே எண்.8/71–க்கும் (வடக்கு), 50.00 மீட்டர் அகல தேசிய நெடுஞ்சாலைக்கு (கிழக்கு) 3.00 மீட்டர் அகல திறவிடத்திற்கும், (A) உள்ளாட்சி துறை பயன்பாட்டிற்கு மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கும் (மேற்கு) இதன் மத்தியில் கி.மே.இருபுறமும் 7.0 மீட்டர் தெ.வ.கீழ்புறம் 24.43 மீட்டர் மேற்புறம் 22.00 மீட்டர் ஆக 163.20 சதுர மீட்டர் ஷை வீதியை தாங்கள் வழிநடையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

சாலை –2 :– மேற்படி மனைப்பிரிவில் உள்ள கிழக்கு மேற்காக செல்லும் 9.00 மீட்டர் அகலமுள்ள 2–வது சாலைக்கு சக்குபந்தி:– (A) உள்ளாட்சி துறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கும் (மேற்கு) இதன் மத்தியில் கி.மே.இருபுறமும் 7.0 மீட்டர் தெ.வ.கீழ்புறம் 24.43 மீட்டர் மேற்புறம் 22.00 மீட்டர் ஆக 163.20 சதுர மீட்டர் ஷை வீதியை தாங்கள் வழிநடையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

சாலை –2 :- மேற்படி மனைப்பிரிவில் உள்ள கிழக்கு மேற்காக செல்லும் 9.00 மீட்டர் அகலமுள்ள 2–வது சாலைக்கு சக்குபந்தி:- (A) உள்ளாட்சி துறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும், (B) மின்சார வாரிய பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும், மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கும் (தெற்கு) மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கும் (வடக்கு), டவுன் சர்வே எண்.8/31–க்கும் (மேற்கு), தெ.வ.7.00 மீட்டர் அகல 1–வது சாலைக்கும் (கிழக்கு), இதன் மத்தியில் கி.மே. வடபுறம் 96.77 மீட்டர் தென்புறன் 94.86 மீட்டர் தெ.வ. இருபுறமும் 9.00 மீட்டர் ஆக 862.33 சதுர மீட்டர், மூலை முடக்கு 2.25 மீட்டர் ஷை வீதியை தாங்கள் வழிநடையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

ஆக மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் 1027.78 சதுர மீட்டர்.

(A) பொது ஒதுக்கீடு இடம் உள்ளாட்சி பயன்பாட்டிற்கு:

கி.மே. 9.00 மீட்டர் அகல 2–வது சாலைக்கும் (வடக்கு), திறவிடத்திகும் (தெற்கு), தெ.வ. 7.00 மீட்டர் அகல 1–வது சாலைக்கும் (கிழக்கு), (B) மின்சாரதுறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும் (மேற்கு), இதன் மத்தியில் கி.மே வடபுறம் 5.06 மீட்டர், தென்புறம் 3.49 மீட்டர், தெ.வ.கீழ்புறம் 5.04 மீட்டர், மேல்புறம் 2.70 மீட்டர் இந்த அளவுள்ள 22.22 சதுர மீட்டர் மேற்படி இடத்தை தாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

(B) பொது ஒதுக்கீடு இடம் மின்சார துறை பயன்பாட்டிற்கு:

கி.மே 9.00 மீட்டர் அகல 2–வது சாலைக்கும் (வடக்கு), திறவிடத்திற்கும் (தெற்கு), (A) உள்ளாட்சிதுறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும் (கிழக்கு), மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கம் (மேற்கு) இதன் மத்தியில் கி.மே.வடபுறம் 4.22 மீட்டர், தென்புறம் 4.14 மீட்டர், தெ.வ.கீழ்புறம் 5.87 மீட்டர், மேற்புறம் 5.04 மீட்டர் இந்த அளவுள்ள 22.71 சதுர மீட்டர் மேற்படி இடத்தை தாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

திறவிடத்திற்கு சக்குபந்தி:-

வாய்க்கால், டவுன் சர்வே எண்.6/5–க்கும் (தெற்கு), மனைப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கும், (A) உள்ளாட்சிதுறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும், (B) மின்சாரதுறை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்கும் (வடக்கு), தெ.வ.செல்லும் 7.00 மீட்டர் அகல 1–வது சாலைக்கும் (கிழக்கு), டவுன் சர்வே எண்.8/31–க்கும் (மேற்கு) இதன் மத்தியில் கி.மே. மீட்டர் வடபுறம் 111 தென்புறம் 103.20 தெ.வ. மீட்டர் இருறமும் 3.00 இந்த அளவுள்ள 310.63 சதுர மீட்டர் மேற்படி இடத்தை தாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

மேற்படி மனைப்பிரிவுக்கு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.D2GTCT2/2024/TCP நாள்.07/10/2024–ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு வசதிகள் மனைப்பிரிவு அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.23.09.2020–ன்படி மனைப்பிரிவு உரிமையாளரால் இந்நகராட்சி பொறியியல் பிரிவு வழிகாட்டுதல்படி அடிப்படை வசதியான சாலை மற்றும் வடிகால் வசதி அமைக்கப்பட்டுள்ளது என 27.02.2025 அன்று சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி அடிப்படை வசதிகளான மதிப்பீட்டு தொகை ரூ.4,30,000/– மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.50.000/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு மனுதார் இரசீது இணைத்துள்ளார்.

சிறப்பு நிபந்தனைகளின்படி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி மேற்கண்ட மனைப்பிரிவில் தானமாக பெறப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஓதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தினை நகராட்சி பெயருக்கு நில உரிமம் மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் நாள்.18.03.2025 அன்று வட்டாட்சியர் அவர்களால் உட்பிரிவு செய்து நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(8884/2024/F1)

**187.** தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தாற் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு (நகர்மன்ற தீர்மான எண்.757, நாள்.23.12.2024) ஒப்புதல் அளிக்கப்பட்டது. நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழில் உரிமம் தொடர்பான பிரேரனை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு சில திருத்தங்களுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குனரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்வரும் விவரப்படி திருத்திய உரிமக் கட்டணம்

01.01.2025 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது..

வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்–(1) அட்டவணைகள் I, II, III–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என , எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், விழுப்புரம் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1–இல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களில் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுறவு சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்துவரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில் அவர் படிவம்–17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

அட்டவனை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில் அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18–ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி பயன்பாட்டுக்கு உள் விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 வதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தறைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்க்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் 1–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமரப்பிக்கப்படும் போது. உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவனை I, II, III மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.01.2025–ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு – (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31–ம் தேதி முடிவடையும்.

அட்டவணை I

[See rules 289(1),(2) and (5) ]

1. பொருந்தக்கூடிய தன்மை ;

   1948–ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948–ம் ஆண்டு மத்திய சட்டம் LXIII), 1951– ம் ஆண்டு தொழிற்சாலைகள் ( மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் (1951 –ம் ஆண்டு மத்திய சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்காலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்திய சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிப்பொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. உரிமக்கட்டணம் ;

   குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ. விண்ணப்பதாரர், ஒரு செல்லபடியாகக் கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண்.(GST எண்) அல்லது சமீப்பத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ. விண்ணப்பதாரர், ஒரு செல்லுப்படியாக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து படிவப் 17–ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –இல் குறு, சிறு. நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

(a) குறு தொழில் நிறுவனங்கள் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ.) | அதிக பட்ச கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/– | 3,500/– |

(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ.) | அதிக பட்ச கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5,000/- |

(c) நடுத்தர தொழில் நிறவனங்கள் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ.) | அதிக பட்ச கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10,000/- |

(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை ( ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ.) | அதிக பட்ச கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/- | 35,000/- |

வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் ; ( ஒரு வருடத்திற்கான கட்டணம் )

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (1500-3500) | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (3500 -5000) | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (7500-10000) | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (10000 -35000) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 2000/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 2000/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு தயாரிப்புகள் உற்பத்தி செய்தல் | 2000/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகள் உற்பத்தி செய்தல் | 2000/- | 5000 /- | 10,000/- | 30,000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகள் சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 2000/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்து செய்தல் | 2500/- | 5000 /- | 10,000/- | 15,000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 3000/- | 5000 /- | 10,000/- | 20,000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10,000/- | 20,000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின் மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 25,000/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 25000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10,000/- | 30,000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10,000/- | 20,000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 2500/- | 5000/- | 8000/- | 15,000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 3000/- | 3750/- | 8000/- | 15,000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 3500/- | 5000/- | 10,000/- | 15000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 10000/- | 15000/- |
| 18 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 5000/- | 7500/- | 12000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 3000/- | 5000/- | 10000/- | 20,000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 3500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 3500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபரணங்க ளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 20000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 20000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 3500/- | 5000/- | 10000/- | 25000/- |
| 26 | காற்று பதனிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 20000/- |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 7500/- | 15000/- |
| 29 | அனைத்தி வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 15000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 15000/- |
| 31 | பூச்சிகொல்லிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 15000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 15000/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 5000/- | 10000/- | 12000/- |
| 34 | அனிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 5000/- | 10000/- | 20000/- |
| 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 3500/- | 7500/- | 15,000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 2500/- | 3750/- | 7750/- | 20000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 3750/- | 7750/- | 10000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 35000/- |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 25000/- |
| 41 | அனைத்து வகையான மர / பிளைவுட் / சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 20000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 10000/- | 20000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 15000/- |
| 44 | அனைத்து வகையான வேலாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 7500/- | 10000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 15000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 7500/- | 10000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12000/- |
| 49 | நகராட்சியால் கருதப்படும் இதர வருவாய் தரத்தக்க தொழில் இனங்கள் | 3000/- | 10000/- | 25000/- | 50000/- |

மேற்குறிப்பிட்ட பட்டியல் தவிர இதர இனங்கள் இருப்பின் அவ்வினங்களுக்கென கட்டணங்கள் ஆணையாளரால் நிர்ணயம் செய்யப்படுவதாகும்.

அட்டவணை II

{ See rules 289 (1),(2) and (5)}

1. பொருத்தும் தன்மை :

(1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள, கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது :–

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.

2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்.

3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற இணைய உலாவல் மையங்கள் (Browsing Centres)
மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.

4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்று வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள இனங்கள் உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

1. உரிமக் கட்டணம் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ.) | அதிக பட்ச கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/– | 10,000/– |

2. வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல் :

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் சிறியது | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் நடுத்தரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் பெறியது |
|---|---|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு பொருட்களையும் சர்வீஸ் மையங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 8 | கழிவுத்தாள் கடை / பழைய வேண்டாத பொருட்கள் | 2000 | 5000 | 7500 |
| 9 | நூற்பு வேலைகள் | 2000 | 5000 | 10000 |
| 10 | அனைத்து வகையான இய்ந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் ( Air conditioner) | 1000 | 2000 | 5000 |
| 12 | காற்றமுத்திகள் (Air Compressors ) | 1000 | 2000 | 5000 |
| 13 | அனைதுதி வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் | 2000 | 5000 | 10000 |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weight machine) | 2000 | 5000 | 10,000 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 2000 | 5000 | 10,000 |
| 17 | தலைக்கவச கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 18 | இரு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்குளுக்கான ஆட்டோ மொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 5000 | 7500 | 10,000 |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10.000 |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 | 7500 | 10,000 |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 | 7500 | 10,000 |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை உபகரணங்களையும் சேமித்து மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares ) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 32 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 33 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 34 | அணிகலன்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 35 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 36 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல்(தளவாட சமான்கள்) | 1000 | 2000 | 5000 |
| 37 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 38 | அனைத்து வகையான ஆடைகள்/ துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 | 7500 | 10,000 |
| 39 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள் / டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40 | அனைத்து வகையான கொள்கலன்களை மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 41 | அனைத்து வகையான அறைகல்ன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 42 | அனைத்து வகையான மர / ப்ளைவுட் / சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 43 | மர வடிவமைப்புகள் விற்பனை | 2000 | 5000 | 10000 |
| 44 | ஷாமியான மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1000 | 2000 | 5000 |
| 45 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 46 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 47 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 48 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 49 | அழைப்பிதழ்கள் / வாழ்த்து அட்டை விற்பனை / அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 2000 | 5000 | 10,000 |
| 50 | மருந்துக்கடைகள் | 2000 | 5000 | 10000 |
| 51 | மருத்துவ உபகரணங்கள் / சாதனங்களை மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 52 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 53 | எரியக்கூடிய பொருட்கள் ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 54 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 55 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை ( Centering Materials ) வாடகைக்கு விடுதல் | 2000 | 5000 | 10,000 |
| 56 | அனைத்து வகையான வேளான் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 57 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 58 | திரைப்பட ஆய்வகங்கள் | 5000 | 7000 | 10,000 |
| 59 | வாகன நிறுத்த நிலையங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 60 | பார்சல் புக் செய்யுமிடங்கள் / தூதஞ்சல் ( Courier ) சேவைகள் | 2000 | 5000 | 10000 |
| 61 | கேபிள் டி.வி சேவைகள் | 2000 | 5000 | 10000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 62 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 63 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 2000 | 5000 | 10,000 |
| 64 | பட்டாணி வறுதல் | 1000 | 2000 | 5000 |
| 65 | ஃபன்சி ஸ்டோர் | 1000 | 2000 | 5000 |
| 66 | பஞ்சு மெத்தை / தலையனை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 67 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 68 | பல் பொருள் அங்காடி | | | |
| 69 | ஜெராக்ஸ் கடை கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 1000 | 2000 | 5000 |
| 70 | ஸ்டிக்கர் கடைகள் | 2000 | 5000 | 7500 |
| 71 | தாவர நாற்றங்கால் கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 72 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 1000 | 2000 | 5000 |
| 73 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000 | 2000 | 5000 |
| 74 | பொற்கொல்லர்கள் | 2000 | 5000 | 10000 |
| 75 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ( கிருமி நாசினிகள்) | 1000 | 2000 | 5000 |
| 76 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 77 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 78 | முடி வெட்டும் நிலையங்கள் | 1000 | 2000 | 5000 |
| 79 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத / ஸ்பாஸ் (Spa's) | 2000 | 5000 | 10,000 |
| 80 | தையல் கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 81 | சலவைய்கங்கள் | 1000 | 2000 | 5000 |
| 82 | வினைல் போர்டு கடைகள் | 2000 | 5000 | 10,000 |
| 83 | காலணி கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 84 | கைப்பேசி கடைகள் ( விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 2000 | 5000 | 10000 |
| 85 | மிதி வண்டி மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 1000 | 2000 | 5000 |
| 86 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 2000 | 5000 | 10000 |
| 87 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 5000 | 7500 | 10,000 |
| 88 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 5000 | 7500 | 10,000 |
| 89 | அச்சகங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 90 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 2000 | 5000 | 10,000 |
| 91 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 | 2000 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 92 | நகைகளை விற்பனை செய்தல் ( சிறிய கடைகள்) | 2000 | 5000 | 10,000 |
| 93 | நெல் அவித்தல் | 1000 | 2000 | 5000 |
| 94 | மரம் அறுக்கும் ஆலைகள் | 2000 | 5000 | 10000 |
| 95 | FCS ஆலைகள் (Farm and commercial Storage Manufacturing) | 2000 | 5000 | 10,000 |
| 96 | அரிசி ஆலைகள் | 2000 | 5000 | 10000 |
| 97 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 98 | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 99 | ஆட்டு இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 | 3000 | 5000 |
| 100 | கோழி இறைச்சி / ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10,000 |
| 101 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 102 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 103 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 104 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 105 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 106 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000 | 10000 |
| 107 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 108 | மருத்துவ ஆய்வகங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 109 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 110 | அனைத்து வகையான கால்நடைகள் / பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 111 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000 | 2000 | 5000 |
| 112 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 113 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |
| 114 | அனைத்து வகையான மளிகை பொருள்களையுப் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 2000 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 115 | பேக்கரிகள் | 2000 | 5000 | 10000 |
| 116 | பழச்சாறு கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 117 | AMF ( Assured Minimum Facility) உடன் ட கடைகள் | 1000 | 2000 | 5000 |
| 118 | நீர்வாழ்வள காட்சிசாலை ( Aquarium) | 1000 | 2000 | 5000 |
| 119 | ஊறவத்த தானியங்களை அரைத்தல் | 1000 | 2000 | 5000 |
| 120 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 121 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 2000 | 5000 | 10,000 |
| 122 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 2000 | 5000 | 10,000 |
| 123 | மற்றவை | 2000 | 5000 | 10000 |

மேற்குறிப்பிட்ட பட்டியல் தவிர இதர இனங்கள் இருப்பின் அவ்வினங்களுக்கென கட்டணங்கள் ஆணையாளரால் நிர்ணயம் செய்யப்படுவதாகும்.

அட்டவணை IV

(See rules 282(11) மற்றும் 286(2) – ஐ பார்க்கவும்

(i) தனியார் வாகன நிறுத்த நிலையம் மற்றும் உறைவிடம் (Shelter) (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | சிறு தொழில் (500 முதல் 2000 சதுர அடிக்குள்) | நடுத்தரம் (2000 முதல் 4000 சதுர அடிக்குள்) | இதர மற்றும் பெரியது (4000 சதுர அடிக்கு மேல்) |
|---|---|---|---|
| தனியார் வாகன நிறுத்த நிலையம் மற்றும் உறைவிடம் (Shelter) | 5000 | 10000 | 30000 |

(ii) தனியார் இறைச்சி கொட்டில்கள் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | சிறு தொழில் (500 முதல் 2000 சதுர அடிக்குள்) | நடுத்தரம் (2000 முதல் 4000 சதுர அடிக்குள்) | இதர மற்றும் பெரியது (4000 சதுர அடிக்கு மேல்) |
|---|---|---|---|
| தனியார் இறைச்சி கொட்டில்கள் (Slaughter House) | 5000 | 10000 | 20000 |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.04.2024–ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அட்டவணை III

{ See rules 289 (1),(2) and (7)}

(1) பொருந்தும் தன்மை :–

(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

(2) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான. வாரந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்

(3) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்கூட்டங்களாகப் பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கும் பொருந்தும்.

(2) உரிம கட்டணம் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

(i) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுறள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/–அதிகப்பட்ச கட்டணம் – ரூ.15000/–

(ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | | |
|---|---|---|---|
| | சிறியது | நடுத்தரம் | பெறியது |
| சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள் | 1000 | 2000 | 3000 |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் | 2500 | 7000 | 15,000 |

(ii) 2014–ஆம் ஆண்டு தமிழிநாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் ( முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்,

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1500/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.3500/– ( ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | | |
|---|---|---|---|
| | சிறியது | நடுத்தரம் | பெறியது |
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 5000/– | 10000/– | 25000/– |

(iii) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்துர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள், சத்திரம், மளிகை, விருந்தினர் இல்லம் தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ. 30000/–

(ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

| தொழில் விபரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் சிறியது | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் நடுத்தரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் பெறியது |
|---|---|---|---|
| 1939 –ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள்,சத்திரம் மாளிகை, விருந்தினர் இல்லம் தொண்டு அடிக்குமாடி குடியிருப்புகள் | 5000/– | 10,000/– | 25,000/– |

(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படித்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–

(ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

| தொழில் விபரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் சிறியது | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் நடுத்தரம் | 01.01.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் பெறியது |
|---|---|---|---|
| திருமண மண்டபங்கள் | 5000/– | 10,000/– | 20,000/– |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்ப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | 5000/– | 15,000/– | 25,000/– |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.01.2025 –ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(37/2021/எச்1)

**188.** நகராட்சி பொது சுகாதாரம், நகராட்சி 42 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள பொது மற்றும் சமுதாய கழிவறைகள்–23 எண்ணிக்கையிலான கழிவறைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட சுய உதவிக்குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் விவரம் | நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|
| | | அலமேலுபுரம் டாக்டர் அப்துல்கலாம் ஆண்கள் சுய உதவி நலச்சங்கம், 18, ஜெயலட்சுமி நகர் முதல் தெரு, அலமேலுபுரம், விழுப்புரம் | KJMM Man Power Service, 27,Vanakara Kuppusamy Street, East Pondy Road, Villupuram | மருதாணி மகளிர் சுயஉதவிக்குழு, பாரதியார் தெரு, வி.மருதூர், விழுப்புரம். |
| | | கழிப்பிடம் ஒன்றிற்கு மற்றும் மாதம் ஒன்றிற்கு | கழிப்பிடம் ஒன்றிற்கு மற்றும் மாதம் ஒன்றிற்கு | கழிப்பிடம் ஒன்றிற்கு மற்றும் மாதம் ஒன்றிற்கு |
| 1 | 23 எண்ணிக்கை பொது கழிப்பிடங்கள் பராமரிப்பு பணி செய்தல் | 5000 | 5250 | 5500 |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம். வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அலமேலுபுரம் டாக்டர் அப்துல்கலாம் ஆண்கள் சுய உதவி நலச்சங்கம் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி அலமேலுபுரம் டாக்டர் அப்துல்கலாம் ஆண்கள் சுய உதவி நலச்சங்கம் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2773/2025/எச்1)

**189.** இந்நகராட்சி இடுகாட்டில் பெயர், விலாசம், ஊர் தெரியாத அனாதைப்பிணங்கள் காவல்துறையின் மூலம் வரும் கடிதத்தின் படி நகராட்சி இடுகாட்டில் நல்லடக்கம் செய்திட இந்நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அரசாணை எண்.113 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.20.08.1998 ன் படி பிரேதம் ஒன்றுக்கு ரூ.200/– ம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2025–2026 ம் கண்டுள்ள மேற்படி செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.50,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3376/2020/எச்2)

**190.** விழுப்புரம் நகராட்சி மாவட்டத்தலைநகராக விளங்குவதோடு, சிறப்பு நிலை நகராட்சியாக அமைந்து உள்ளது. இங்கு 1,70,000 மக்கள் தொகையும், 36000 வீடுகளும் உள்ளன.

இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் முழுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் முழுமையான அளவில் செயல்படவில்லை. இது தவிர இன்னமும் இந்நகராட்சியில் திரவக்கழிவுகளினை அப்புறப்படுத்த செப்டிக் டேங்கர் லாரிகளை பயன்படுத்தும் முறை நடைமுறையில் உள்ளது. நகரில் உள்ள பெரும்பாலான வீடுகளில் உள்ள நச்சுத்தொட்டியினை சுத்தம் செய்திட தற்போது வரை கழிவு நீரேற்றும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றன. விழுப்புரம் நகராட்சியில் 10 தனியார் கழிவு நீரகற்றும் வாகனங்கள் இப்பணியில் செயல்பட்டு வருகின்றன.

அரசாணை (MS).No.183, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (MA) நாள்.31.12.2022–ன் படி நகராட்சியில் இயங்கும் அனைத்து கழிவுநீர் அகற்றும் வாகனங்களும் உரிய உரிமம் நகராட்சியிடம் இருந்து பெறப்பட வேண்டும்.

1. கழிவுநீரகற்றும் வாகனம், நகராட்சியில் இயங்க ரூ.2000/– உரிமக்கட்டணம் வரைவோலையாக செலுத்த வேண்டும்.
2. வாகனத்தின் RC புத்தகம், ஃபிட்னஸ் சான்று, சாலைவரி , இன்சூரன்ஸ் , வாகனத்தின் நம்பர் பிளேட், (முன்,பின்) தெரியுமாறு உள்ள புகைப்படம்.
3. விண்ணப்பதாரரின் முகவரி சான்று, போட்டோ ID Pancard, ஓட்டுநரின் உரிமம் மற்றும் மருத்துவ சான்று போன்றவை இணைக்கப்பட வேண்டும்.
4. தனிப்பட்ட விபத்து இன்சூரன்ஸ் பாலிசி ஓட்டுநருக்கு 10 இலட்சத்திற்கு எடுத்திருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டவைகளுடன் விண்ணப்பித்து , நகராட்சியில் உரிமம் பெற வேண்டும். மேலும், ஒரு கழிவுநீரகற்றும் வாகனத்தில் நிரப்பப்பட கழிவு நீரினை உரிய இடமாக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தான் (Decanting) அகற்றப்பட வேண்டும்.

இவ்வலுவலக வாகனங்கள், 6000 லிட்டர் கொள்ளளவு என்றால் ரூ.200–ம், 6000 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனம் என்றால் ரூ.300–ம் நகராட்சிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வாகனங்கள் கொண்டு செல்லும் கழிவு நீரை பொது இடங்களில் கொட்டாமல் முறைப்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தான் கழிவுநீரினை கொட்டி வர வேண்டும். ஆனால் ஆங்காங்கே விதிமீறல்கள் நடைபெற்று வருகிறது. அவ்வப்போது நகராட்சியும், இம்முறையினை ஒருங்கிணைந்த விழுப்புரம் நகராட்சியில் அமைந்துள்ள STP–யில் கழிவுநீரினை சென்று கொட்டி வரும் வாகனங்கள் செலுத்த வேண்டிய தொகையினை மற்றும் ஒவ்வொரு வாகனத்திற்கான தொகையினை கணக்கில் கொண்டு இப்பணியினை தனியார் நிறுவனம் ஏதேனும் ஒன்றிற்கு ஒப்பந்தம் செய்து தரலாம். அதன்படி, அரசு விதிகளில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மிகாமல் கழிவுநீரகற்றிக் கொள்ளவும், அவ்வாறு கழிவுநீர் அகற்றப்பட்ட வாகனங்கள், STP–யில் சென்று

கொட்டி வரும் 10 கழிவுநீரகற்றும் வாகனங்களினை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருங்கிணைந்து, அதற்குரிய வருடாந்திர தொகையினை ஒப்பந்தம் செய்திட்ட தனியார் நிறுவனம் நகராட்சிக்கு செலுத்திட வேண்டும். மேலும் 14420 என்ற பொது அழைப்பு எண் பயன்படுத்தி திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் போது, அதன் விதிகளுக்கு உட்படுத்தி செயல்படவும் ஏதுவான தனியார் நிறுவனத்தினை பணியமர்த்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (634/2023/எச்1)

**191.** விழுப்புரம் மாவட்ட தலைநகராக விளங்கும் விழுப்புரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இங்கு 36690 வீடுகள் உள்ளன. சற்றேறக்குறைய 1,70,000 மக்கள் தொகை உள்ளது. இங்கு தினசரி 45.91 மெ.டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இந்நகராட்சியில் 559 எண்ணிக்கையிலான தெருக்கள் உள்ளன.

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் இருந்தாலும், முழுமையான பணிகள் நிறைவு பெறவில்லை. மேலும் முழு அளவில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படவில்லை. இந்நகரில் உள்ள மழைநீர் கால்வாய்களின் நீளம் 85.82 கி.மீ ஆகும். இந்த 85.82 கிமீ நீளம் உள்ள கால்வாய்கள், நகராட்சியின் கழிவுநீர் கால்வாய்களாகவும் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கால்வாய்களில் மண், குப்பை, கல் போன்ற அடைப்புகள் இருந்த வண்ணம் இருக்கிறது. இதனை தூய்மைபடுத்தவும், கழிவுநீர் கால்வாயில் ஏற்படும் அடைப்புகளை தினசரி அப்புறப்படுத்திட நகராட்சியால் (AFS Division) 12 பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. 85.82 கிமீ நீளம் உள்ள கால்வாய்கள் 42 வார்டுகளிலும் உள்ளபடியால் அவற்றை 12 பணியாளர்கள் கொண்டு தூர் வாருதல், அவற்றில் இருக்கும் குப்பைகளை அகற்றுதல் மற்றும் தூர் வாரிய மண் (Slit) மற்றும் இதர பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள 12 AFS பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே மேலும் தூய்மை பணியாளர்களின் தேவை ஏற்படுகிறது.

42 வார்டுகளை உள்ளடக்கிய இந்நகரில் 12 தூய்மை பணியாளர்கள் என்பது இப்பணிக்கு மிகவும் குறைவான எண்ணிக்கையாகும். மேலும், கழிவுநீர் மற்றும் கால்வாய்களை தூய்மை படுத்துவதோடு அக்கால்வாயில் ஏற்படும் கொசு புழுக்களை அழிக்கும் பணிகளையும் மற்றும் கொசு புழு உற்பத்தியை தடுக்கும் மருந்துகளை தெளிக்கும் பணிகளையும் 12 பணியாளர்களை கொண்ட AFS Division பணியாளர்களே மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

பொது சுகாதாரத்தை பேணி காக்கவும், பொது மக்களை நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கவும், கால்வாய் சுத்திகரிப்பு பணி மிகவும் அவசியமான ஒன்றாகும். மேலும் இக்கால்வாய்களில் உற்பத்தியாகும் கொசு புழுக்கள் மலேரியா போன்ற நோய் தொற்றிற்கு காரணமாக விளங்குகிறது. மேலும் நமது மாவட்டம் Filaria போன்ற நோயின் Endemic

District ஆக விளங்குவதாலும், திறந்த வெளி கால்வாய்களை தூய்மை செய்திட, குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் 20 தூய்மை பணியாளர்களை நியமித்து 6 மாதத்திற்கு பணி செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.20/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (2770/2025/எச்1)

**192.** விழுப்புரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகவும். மாவட்டத்தலைநகரமாகவும் உள்ளது. இங்கு தோராயமாக சுமார் 36000 வீடுகள் மற்றும் சற்றேறத்குறைய 1.70 இலட்சம் மக்கள் இங்க வசிக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் பன்றிகள் வளர்க்கும் நகராட்சிகளில் விழுப்புரமும் ஒன்று. பன்றிகள் வளர்ப்பதற்கு என்று எந்த அனுமதியும், பன்றிகளை வளர்ப்பவர்கள் நகராட்சியிடமிருந்து இதுநாள் வரை பெறவில்லை. மேலும் அவரவர் பட்டிகளில் பன்றிகளை அடைத்து வைத்து பராமரிக்கவில்லை. காலிமனைகள் தோறும், அனைத்து பகுதிகளிலும், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளிலும் பன்றிகள் சுற்றித்திரிந்து பொதுமக்களுக்கு பெருத்த பிரச்சனையை தந்து வருகிறது. இது குறித்து தொடர்ந்து பொதுமக்களிடம் இருந்து, நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடக செய்திகளிலும், உயர் அலுவலர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்திட வேண்டும் என்பது குறித்தான வழக்கு ஒன்று மக்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

எனவே பொதுமக்கள் நலன் கருதி பொது சுகாதார நலன் கருதியும், பொது சுகாதார சீர்கேட்டினை விளைவிக்கும் பன்றிகளை நகராட்சியே பிடித்து அப்புறப்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டியுள்ளது. அதற்கு பின்வரும் நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்திடலாம் என்ற கருத்து பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பன்றிகள் பிடிப்பதற்கு 5 நாட்களுக்கு முன்பே எழுத்து பூர்வமான அறிவிப்பு பன்றிகள் வளர்ப்பவர்களுக்கு வழங்கிட வேண்டும்.
2. பன்றிகளை பிடிப்பதற்கு முன்பு பன்றிகள் வளர்ப்பவர்கள் மற்றும் அது தொடர்பான சங்கத்தினை நேரில் அழைத்து கூட்டம் நடத்தி இப்பொருள் குறித்து தெரிவிக்கலாம்.
3. தினசரி நாளிதழில் இது குறித்து விளம்பரப்படுத்திடலாம்.
4. பன்றிகளைப்பிடிக்கும் பணியில் காவலர்களையும் இணைத்திட தொடர்புடைய காவல் உயர் அலுவலருக்கு கடிதம் எழுதி அவர்களின் பாதுகாப்பினை கோர வேண்டும்
5. பன்றிகள் பிடிக்கும் அன்று இப்பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். காலஅவகாசம் கொடுத்த பின்னர் தான் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும் பணி நடைபெறுவதால் யாரும் இடையூறாக இருக்கக்கூடாது.
6. மீறி இடையூறு விளைவிக்கும் நபர்களினை காவல் நிலையத்தில் ஒப்படைக்கலாம்.

7. பிடிபடும் பன்றிகளுக்கு, யாரேனும் உரிமை கோரினால், முதல் முறை என்றால் குறைந்த பட்சம் ரூ.500 முதல் 1500 வரை (ஒரு பன்றிக்கு) தண்டத்தொகை நகராட்சி கணக்கில் செலுத்தி அதன் உரிமையாளர் மீட்டுக்கொள்ளலாம். இரண்டாம் முறை அதே உரிமையாளர் பன்றிக்கு உரிமை கோர இயலாது.
8. பன்றிகளை பிடிப்பதற்கு ஒரு குழு ஒன்றிற்கு பணி உத்தரவு வழங்கிட வேண்டும். எந்த குழு பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும் பணி செய்ய வேண்டும் என்று இறுதி முடிவு எடுப்பது நகராட்சி ஆணையாளரை சார்ந்தது ஆகும்.
9. பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்திட நியமிக்கப்படும் குழுவின் பணிக்கு ஒரு நாளைக்கு ரூ.10000/- முதல் 15000 /- வரையிலான உதவித்தொகை வழங்கிடலாம். இது தவிர தண்டத்தொகை செலுத்தி மீட்கப்படாத பன்றிகளை, பன்றிகளை பிடிக்க நியமிக்கப்பட்ட குழுவினரிடமே ஒப்படைத்திடலாம். அதற்குரிய தொகை நகராட்சி கணக்கில் பன்றிகளை பிடிக்க நியமிக்கப்பட்டுள்ள குழு செலுத்திட வேண்டும்.
10. பன்றிகள் பிடிக்கும் பணி நகராட்சி துப்புரவு ஆய்வாளர் முன்னிலையில் தான் நடைபெறும். அந்தந்த பகுதி துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் உடன் இருந்து இப்பணியினை கவனித்து வர வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் பிடிக்கப்பட்ட பன்றிகளின் கணக்கினை பதிவேட்டில் எழுதி அப்பகுதி மக்களிடம் கையொப்பம் பெற வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளை எடுத்து பன்றிகளை பிடித்து அகற்றிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (2051/2022/எச்1)

**193.** விழுப்புரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகவும், மாவட்ட தலைநகரமாகவும் விளங்குகிறது. இங்கு சுமார் 1,70,000 மக்கள் தொகையும், 36000 வீடுகளும் உள்ளன.

இந்நகராட்சியில் தெருக்கள் மற்றும் சாலைகளில் சுற்றித்திரியும் பராமரிப்பற்ற நாய்களின் எண்ணிக்கை கனிசமாக அதிக அளவில் உள்ளது. இவ்வாறு எவ்வித பராமரிப்புமின்றி தெருக்கள் மற்றும் சாலைகளில் சுற்றி திரியும் நாய்கள், பொதுமக்கள் , பாதசாரிகள், பள்ளி செல்லும் குழந்தைகள் வாகன ஓட்டிகள் (பெரும்பாலும் இரு சக்கர வாகன ஓட்டிகள்) போன்றோர்க்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. இவ்விதமாக சுற்றித்திரியும் நாய்களால் வாகன விபத்துகளும் ஏற்படக்கூட சாத்திய கூறுகள் உள்ளது. மேலும் பள்ளி செல்லும் சிறார்கள், மற்றும் பொது மக்கள் சாலைகள் மற்றும் தெருக்களை கடக்க முயலுகையில் இந்நாய்கள் அவர்களை பின்தொடர்ந்து சிலசமயம் கடிக்கவும் செய்கின்றது என்பது போன்ற தொடர் புகார்கள் பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர் மற்றும் ஊடகங்களில் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. மேலும் இவ்விதமான நாய்கள் கடித்தால் அது ரேபிஸ் (Rabies) நோய் தொற்று பரவும் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளது. கடந்த 2023 ம் ஆண்டு விழுப்புரம் நகரில் உள்ள தெரு நாய்கள் குறித்தான கணக்கெடுப்பில் சற்றேறக்குறைய 6000

தெரு நாய்கள் உள்ளதாக தெரிய வந்தது. சமீபத்திய நாட்களில் தெரு நாய்களைப்பிடித்து குடும்பக்கட்டுப்பாடு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளாததால் தற்போது மேற்குறிப்பிட்டுள்ளதைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் தெரு நாய்கள் இந்நகரில் இருக்கக்கூடும் என்றும் Rabies நோய் இருக்க வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதியும், பொது சுகாதாரம் பேணி காக்கவும் தெருவில் சுற்றித்திரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திட அதீத எண்ணிக்கையிலான தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்திட பார்வையில் காணும் இந்திய அரசாங்கத்தின் அரசிதழில் உள்ளபடி நகராட்சியானது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளூர் அதிகாரம் பெற்ற நகராட்சியால் செயல்படுத்த வேண்டியவை

1. தெரு நாய்களுக்கான கருத்தடை செய்யும் அறுவை சிகிச்சை மையம் ஒன்றை Animal Husbandry Department–ன் வழிகாட்டுலின் படி ஏற்படுத்திட வேண்டும் அல்லது ஏற்கெனவே இருப்பின் புதுப்பித்திட வேண்டும்.
2. நாய்களை பிடித்து கருத்தடை செய்திடும் மையத்திற்கு எடுத்துச்செல்லவும், பின்னர் அவற்றை பிடித்த இடத்திலேயே விடுவதற்கும் தேவையான வாகன வசதி ஏற்படுத்திட வேண்டும் அல்லது பழைய வாகனத்தை புதுப்பித்திட வேண்டும்.
3. அறுவைசிகிச்சை செய்த பிறகு, எஞ்சியிருக்கும் நாய்களின் உடலுறுப்புகளை செயலாக்கம் செய்து அழித்திட இன்சினேட்டர் நிறுவ வேண்டும் அல்லது ஆழ்குழி தோண்டி அதில் புதைத்திட வேண்டும்.
4. விலங்குகள் கருத்தடை மையத்தினை அவ்வப்போது பழுது பார்த்து, பராமரித்திட வேண்டும்.
5. CCTV கேமராவினை கருத்தடை சிகிச்சை மையத்தில் நிறுவிட வேண்டும்.
6. கருத்தடை மையத்தினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட வேண்டும்.
7. உள்ளூர் விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாடு குறித்தான கண்காணிப்பு குழு நகராட்சியால் அமைக்கப்பட்டு, மாதம் ஒரு முறை கூட்டம் நடத்திட வேண்டும்.
8. நகராட்சியானது இது போன்ற ABC நிகழ்வுகளை தனது சொந்த பணியாளர்கள் மூலம் மற்றும் சொந்த வாகனத்தின் மூலம் செய்து கொள்ளலாம். (விதி–3 துணை விதி–6) வாடகை அடிப்படையில், நாய்களை பிடிக்கும் வாகனத்தினை தருவித்தல் கொள்வது, நாய்களைப்பிடிப்பவர்களை தருவித்துக்கொள்வது, ஓட்டுநர்களை தருவித்து கொள்வது ஒப்பந்த அடிப்படையில் கால்நடை மருத்துவர்களை இப்பணிக்கென்று நியமித்து கொள்வது போன்றவற்றை செய்து கொள்ளலாம்.
9. வாடகை அடிப்படையில் நியமிக்கப்படும் நாய்களைப் பிடிப்பவர்கள், தகுந்த பயிற்சி பெற்றவர்களாகவும் அப்பணிக்குரிய விதிகளை முறைப்படி பின்பற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகையில் நகராட்சியானது தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தி நகர்வாழ் மக்களின் நலனையும் நோய் அண்டாமல் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டியதாக உள்ளது. எனவே பின்வரும் நடவடிக்கைகளை நகராட்சி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

1. மாம்பழப்பட்டு சாலையில் உள்ள நாய்களுக்கான இனப்பெருக்க கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மையத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணி மேற்கொண்டுபயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். (Animal Husbandry Department ன் வழிகாட்டுதலின் படி)
2. பழைய ABC Center பயன்பாட்டிற்கு வரும் வரை தற்காலிகமாக அறுவை சிகிச்சை மையத்தினை பிரிதொரு இடத்தில் புதியதாக நிர்மாணித்து செயல்பாட்டுக்கு கொண்டு வருதல். (Animal Husbandry Department ன் வழிகாட்டுதலின் படி)
3. நாய்களைப்பிடித்து அறுவை சிகிச்சை மையத்திற்கு எடுத்துச்செல்ல மீண்டும் நாய்களை பிடித்த இடத்திலேயே கொண்டு விட ஏதுவாக ஏற்கெனவே உள்ள வாகனத்தினை பழுது பார்த்தல் வேண்டும். அவசியம் ஏற்படின் வாடகை அடிப்படையில் வாகனம் அமைத்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும்.
4. தெரு நாய்களை பிடித்திடும் பணிக்கு தேவையான தகுதியான நபர்களை வாடகை அடிப்படையில் தற்காலிகமாக தருவித்துக்கொள்ளலாம். பின்னர் இப்பணி செய்திட முன்வரும் நகராட்சி தூய்மை பணியாளர்களை பயிற்சி பெற சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிடலாம்.
5. தேவைப்படின் கால்நடை மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக்கொள்ளவேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி உடனடியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6261/2019/எச்1)

**194.** விழுப்புரம் நகராட்சி 42 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகராட்சியாக திகழ்வதோடு, மாவட்டத்தலைநகராகவும் உள்ளது. இந்நகரின் மக்கள் தொகை சற்றேறக்குறைய தற்போது 1.75 இலட்சம் என்ற அளவில் உள்ளது. பல்வேறு பணிகள் நிமித்தம் இப்பெரு நகராட்சிக்கு தினசரி வந்து செல்பவர்களின் எண்ணிக்கை 1 இலட்சம் என்ற அளவில் உள்ளது.

இந்நகரின் முக்கிய சாலைகளின் நீளம் 12.கி.மீ ஆகும். பேருந்துகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அடங்கிய முக்கிய சாலைகளான சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கிழக்கு பாண்டி சாலை என்று உள்ளன. இத்தகைய சாலைகளில் சென்டர் மீடியன்களில் நகராட்சிப்பகுதிகளில் வளர்க்கப்படும் மாடுகள் படுத்து கொண்டும், சுற்றித்திரிந்தும் வருகின்றன. இதனால் பாதசாரிகளும், இரண்டு சக்கர வாகன ஓட்டிகள், நான்கு சக்கர வாகனங்களில் பயணிப்பவர்களும், மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். சில சமயங்களில் விபத்துகள் ஏற்பட்டு கால்நடைகள் பாதிப்புக்குள்ளாவதோடு, மனிதர்களும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

கால்நடைகளின் உரிமையாளர்கள்,தங்களின் கால்நடைகளை முறையாக பாதுகாக்க வேண்டும், தெருவில் சுற்றித்திரிய

அனுமதிக்கக்கூடாது என்பது குறித்தான விலங்குகள்வாழ் சட்டம் (1960), தமிழ்நாடு நகர்புறங்களில் விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள்(1997) கால்நடை அத்துமீறல் சட்டம் (1871) ஆகியவற்றின் கீழ் நகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே இப்பிரச்சனை குறித்து மாடுகளைத்தொழுவத்தில் வைத்து முறைப்படி பராமரிக்க ஏற்கெனவே கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உள்ளது. எனினும் இப்பிரச்சனை தொடர்ந்து கொண்டே உள்ளது.

இந்நிலை தொடர்வதனால், பொதுமக்கள், பயணிகள், வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாலும், விபத்துகள் நேர்வதாலும் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடகங்களில் தொடர் செய்திகள் வந்த வண்ணம் இருப்பதாலும், விழுப்புரம் நகராட்சி நிர்வாகம் கீழ்காணும் வகையில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டி உள்ளது.

1. விழுப்புரம் நகராட்சி பகுதியில் மாடுகள் வளர்ப்பவர்கள், தங்களது இடத்திலேயே தொழுவம் வைத்து, முறைப்படி மாடுகளை வளர்த்திட வேண்டும். தெருவில் சுற்றித்திரிய அனுமதிக்கக்கூடாது.
2. தெருக்களிலோ, சாலைகளிலோ, பாதசாரிகளுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் தொந்தரவாக இருக்கும் மாடுகள், நகராட்சி நிர்வாகத்தினால் பிடிக்கப்படும் அவ்வாறு பிடித்து செல்லப்படும் மாடுகள் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2 தினங்கள் அடைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.
3. இவ்வாறு பராமரிக்கப்படும் மாடுகளின் உரிமையாளர்கள் இரண்டு தினங்களுக்குள் ரூ.3000/- (கன்று குட்டி ஒன்றுக்கு) மற்றும் ரூ.5000/- (மாடு ஒன்றுக்கு) அபராதம் செலுத்திய பிறகு தான் நகராட்சி நிர்வாகத்திடமிருந்து மாடுகளை திரும்ப பெற இயலும். இரண்டாம் முறை அதே உரியமையாளர் மாடுகளுக்கு உரிமை கோர இயலாது. மேற்கூறிய அபராத தொகையானது மாடுகளை பிடிப்பதற்கான செலவு, பட்டிக்கு கொண்டு சென்றதற்கான போக்குவரத்து செலவு, மனித உழைப்பு, மாடுகளை பட்டியில் வைத்து பராமரிப்பதற்கான செலவு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இந்த அபராதம் விதிக்கப்படுகிறது.

மாடுகளை திரும்பப்பெறுவதற்கான நடைமுறைகள்

1. மாடுகளை திரும்பப்பெற எழுத்துபூர்வமான விண்ணப்பம் நகராட்சி ஆணையாளரிடம் அல்லது அவரால் அங்கீகாரம் பெற்றவரிடம் வழங்கவேண்டும். அவ்விண்ணப்பத்தின் பேரில் மாடுகள் வளர்ப்பவர்களிடம் தொழுவம் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து சுகாதார ஆய்வாளர் அறிக்கை தர வேண்டும்.
2. அந்த அறிக்கையின் அடிப்படையில் மாடுகளைவிடுவிக்க நகர்நல அலுவலர், துப்புரவு அலுவலர் இருவரின் ஆய்விற்கு பிறகு விடுவிப்பு ஆணை வழங்குவார்கள்.

மாட்டின் உரிமையாளர் மாடுகளைவிடுவிக்கக்கோரும்
விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது.

1. உறுதி மொழி ஆவணம்
2. ரூ.20 முத்திரைத்தாளில் இனிமேல் மாடுகளை தெருவில் விடமாட்டேன் என்ற உறுதிமொழி வழங்கப்பட வேண்டும்.
3. மாட்டின் உரிமையாளரின் ஆதார் கார்டு
4. இரண்டு சாட்சியின் ஆதார் நகல்
5. அபராதம் செலுத்தியதற்கான இரசீது

மாட்டின் உரிமையாளர் 2 தினங்களுக்குள் நகராட்சியினை அணுகி மாடுகளை அபராதம் செலுத்தி திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும்.திரும்ப பெறாத மாடுகள் 3 ம் நாளில் பொது வெளியில் ஏலம் விடப்படும் அல்லது அருகில் உள்ள கோசாலைகளுக்கு இலவசமாக வழங்கி பராமரிக்க கேட்டுக்கொள்ளப்படும்.

ஏலத்தொகை நகராட்சி கணக்கில் கொண்டு வரப்படும்

நகராட்சி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- மாடுகளை அடைப்பதற்கு உரிய இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- பட்டி அல்லது தற்காலிக தடுப்பு அமைத்து பராமரித்திட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- மாடுகளுக்கு தேவையான தீவனங்களை வாங்கிட வழிவகை செய்யப்பட வேண்டும்.
- மாடுகளை பிடிப்பதற்கான தாம்புக்கயிறு போன்றவை வாங்கப்பட வேண்டும்.
- மாடுகளைப்பிடிப்பதற்கு தகுந்த மேற்பார்வையாளர் மற்றும் பயிற்சி உள்ள தூய்மை பணியாளர்கள் கொண்ட குழு ஏற்படுத்திட வேண்டும்.
- மாடுகள் பிடிக்கப்படப்போகும் செய்தியினை அறிவிப்பாக, நாளிதழ்களிலோ, ஆட்டோ அறிவிப்பின் மூலமாகவும், எழுத்து பூர்வமான அறிவிப்பின் மூலமாகவும் தெரியப்படுத்திட வேண்டும்.
- இப்பணிக்கு காவல்துறையின் ஒத்துழைப்பு அவசியமாகும். எனவே காவல்துறைக்கு கடிதம் அனுப்பி ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கிட கோர வேண்டும்.
- மாடுகளை பிடிப்பதற்கு அதிகாலை நேரம் சரியானதாக இருக்கும். மேலும் இதற்கென்று பிரத்யேக வாகனம் தேவை. அதற்கு நகராட்சி ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது காவல்துறையின் வாகன பறிமுதல் வாகனத்தினை கேட்டு பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளும் செய்திட நகர்மன்ற அனுமதி பெறுவதோடு, அதற்குரிய செலவினத்தை செய்திட தனியார் குறைந்த விலைப்புள்ளி வழங்கும் ஓர் ஒப்பந்ததாரரை நியமித்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் விழுப்புரம் நகராட்சியில் தொடர்ந்து இருந்து வரும் மாடுகளினால் ஏற்படும் தொந்தரவுகள், விபத்துகள் குறையும் என்பதால் பொதுமக்கள் நலன் மற்றும் பொது சுகாதார நலன் கருதி தேவையான நடவடிக்கைகளை எடுத்திட மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (39/2021/எச்1)

**195.** விழுப்புரம் நகராட்சியில் அவ்வப்போது நடைபெறும் திட்டப் பணிகள் / பொதுநிதி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும் மற்றும் நகராட்சியின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான சாதனை விளம்பரங்கள் வெளியிடுவதற்காகவும் தினசரி நாளிதழ்களில் அவ்வப்போது விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, 2025–2026 ஆம் நிதியாண்டிற்கு தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (3633/2017/இ1)

**196.** விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியாளரது ஈப்பு வாகனம் TN32 AB 3276–க்கு இன்ஜின், கியர் பாக்ஸ், கிரௌன் ஆயில் சர்வீஸ் செய்தல், A/C, Suspension, Break overall, Propeller shaft, Wheel bearing, Door glass regulator, Wheel arch, Power stearing rack, Power stearing pump–ல் பழுதடைந்த பாகங்களை அகற்றி புதிய பாகங்கள் பொருத்தும் பணிக்கு ஷாங்காலயா மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.2,11,417/–க்கு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளதற்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி அங்கீகரிக்கப்பட்ட மகேந்திரா டீலர் ஷாங்காலயா மோட்டார்ஸ், விழுப்புரம் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (2231/2025/இ1)

**197.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.16, கீழ்பெரும்பாக்கத்தில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அதிகளவில் தினசரி வருகை தந்து புத்தகங்கள் மற்றும் பயிலரங்க வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறுகிறார்கள். மேற்கண்ட நூலகத்தில் உள்ள கழிப்பறை ஆண் / பெண்களுக்கு போதுமானதாக இல்லாததால், ஆண்களுக்கு தனியாக கழிவறை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,50,000/–க்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ( /2025/இ4)

**நகர்மன்ற தலைவர்**
**விழுப்புரம் நகராட்சி**